RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2542

# Drinking Habits and Domestic Violence against Indian Women by Husbands: A study in Malaysian Tamil Folk Songs

**Dhilipkumar Agilan** [a,*]

[a] Sultan Idrsi Education University, Tanjong Malim, Perak Darul Ridzuan 35900, Malaysia

*Corresponding author Email: dhilipchandrusp@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2542

Received: 20-07-2025; Revised: 15-10-2025; Accepted: 27-10-2025; Published: 05-11-2025

**Abstract:** This study examines the domestic violence faced by Indian women in Malaysian Tamil folk songs due to their husbands' drinking habits. Malaysian Tamil folk songs have been taken as the primary source of evidence in this study. This qualitative study uses descriptive and analytical research designs. Document analysis has been used as the research tool. The study data was analyzed using thematic analysis, contextual analysis, and sequential analysis. Economic violence, physical and sexual violence, and emotional and psychological violence were presented as forms of domestic violence faced by Indian women due to their husbands' alcoholism.

**Keywords:** Indian Women, Malaysian Tamil Folk Songs, Violence, Emotional, Alcoholism

# கணவர்களின் குடிப்பழக்கமும் இந்தியப் பெண்கள் மீதான குடும்ப வன்முறைகளும்: மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களில் ஓர் ஆய்வு

**திலிப்குமார் அகிலன்** [அ *]

[அ] சுல்தான் இத்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், தஞ்சோங் மாலிம், பேராக், மலேசியா

## முன்னுரை

குடும்ப வன்முறை எனப்படுவது ஒருவர் மற்றொருவரைக் குடும்பச் சூழலில் அடக்குமுறைக்கு உள்ளாக்குவதற்கு மேற்கொள்ளும் எதிர்மறை நடத்தையாகும். இந்த வன்முறை உடல், உளவியல், பாலியல், உணர்வு ஆகியவற்றின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைவதோடு மட்டுமல்லாமல், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் பொருளாதாரக் கட்டுப்பாடு ஆகிய வடிவங்களிலும் அமைகின்றது. குடும்ப வன்முறை பெரும்பாலும் வாழ்க்கைத் துணைகள், குடும்ப உறுப்பினர்கள், அல்லது பராமரிப்பாளர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்படுகின்றது. இது உடற் காயங்கள், உணர்வு பாதிப்பு, மன அழுத்தம் ஆகியவற்றை வன்முறைக்கு ஆளானவரின் மத்தியில் ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சில சூழல்களில் அவருடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி சுய விருப்பத்திற்கு எதிராக அவர் கட்டாயத்தின் பேரில் செயல்படவும் செய்கின்றது. மலேசிய நாட்டின் சட்டம் குடும்ப வன்முறையை அச்சத்தை ஏற்படுத்தும், உளம் அல்லது உடலியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும், சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் அல்லது ஆழமான வலியை ஏற்படுத்தும் உள்நோக்கமுடைய நடவடிக்கை என்று வகைப்படுத்துகிறது. (Ali *et al.,* 2023). காலனித்துவ மலாயாவில் ரப்பர் தோட்டங்களில் வாழ்ந்த இந்தியப் பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆட்பட்டுப் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர். அதிகப்படியான கள் அருந்தும் கணவர்களின் குடிப்பழக்கம் அவர்களின் வாழ்க்கையைச் சீரழித்துள்ளது. அதன்வழி, மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள இந்தியப் பெண்கள் அவர்களுடைய கணவர்களின் குடிப்பழக்கத்தின்

காரணமாக எதிர்நோக்கிய குடும்ப வன்முறைகளைப் பதிவுச்செய்வதை இந்த ஆய்வு முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியர்களிடையே குடிப்பழக்கம்

ஆங்கிலேயக் காலனித்துவத்தின் போது, தோட்டப்புறங்களில் வாழ்ந்த இந்திய ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் மிகுதியான உடல் உழைப்பிற்கு ஆட்பட்டனர். அந்த மிகுதியான உடல் உழைப்பின் களைப்பிலிருந்து மீளவும், அதன் காரணமாக ஏற்பட்ட மன உளைச்சலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் அவர்கள் கள் அருந்துவதை ஒரு வடிகாலாகப் பயன்படுத்திக் கொண்டனர் (Gopal & Musa, 2020). அதோடு, அவர்கள் வேலை பளுமிக்க சூழல்களில் சிறப்பாக வேலை செய்வதற்காக கள் அருந்தியுள்ளனர் (Ishak *et al.,* 2024). மேலும், தோட்டப்புறங்களில் கள் சுலபமாகவும் மலிவாகவும் கிடைத்தது. இது, குறைந்த சம்பளம் மெற்ற இந்தியத் தொழிலாளர்கள் அதை மிக அதிகமாக முறையில் அருந்த வழிச்செய்தது (Krishnan & Raman, 2018).

மிகுந்த மன அழுத்தத்திலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள இந்தியப் பெண்கள் தோட்டப்புறங்களில் கள் அருந்தினாலும், ஆண்கள் முதன்மையாக பொருளாதார நெருக்கடிகள், குடும்பச் சிக்கல்கள் மற்றும் மிகுந்த சவால்மிக்க தோட்டப்புற வாழ்க்கை ஆகிய காரணங்களுக்காகக் கள் அருந்தியுள்ளனர் (Krishnan & Raman, 2020). ஆனால், ஆண்களின் இந்த குடிப்பழக்கம் அவர்கள் வாழ்க்கையில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது. கள் குடிக்கு அடிமையாகிவிட்ட இந்திய ஆண்கள் தோட்டப்புறங்களில் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல், மனைவிகள் மற்றும் குழந்தைகளைக் கொடுமைச் செய்தல், திருடுதல், அடுத்தவர் இடங்களில் அத்துமீறி நுழைதல், பிறரைக் காயப்படுத்துதல், வேலைக்கு மட்டம் போடுதல் மற்றும் கொலை போன்ற வன்முறைகளில் ஈடுபடுதல் ஆகியவற்றைப் புரிந்துள்ளனர் (Krishnan & Raman, 2020; Krishnan, 2014).

அதுமட்டுமல்லாது, தங்களுடைய சம்பளத்தின் பெரும்பகுதியைக் கள் குடிப்பதற்காகவே நிறைய ஆண்கள் செலவிட்டதால், அவர்களுடைய குடும்ப வருமானம் பாதிக்கப்பட்டுப் பலர் வறுமையில் உழன்றுள்ளனர் (Ray & Mishra, n.d.). இச்சூழல் இந்தியப் பெண்களை உடல், உளவியல், உணர்வு மற்றும் பாலியல் ரீதியாக பாதித்து அவர்களுடைய வாழ்வைச் சிக்கல் நிறைந்ததாக மாற்றியது.

## பொருளாதார வன்முறை

இந்தியத் தொழிலாளர்கள் கட்டுப்பாடற்ற முறையில் கள்ளைக் குடிக்கத் தொடங்கினர். தோட்டப்புறங்களில் மிக நேர்த்தியாக வாழ்விடங்களுக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட கள் விற்கும் கடைகள் இந்தச் சிக்கலை மேலும் மோசமாக்கின. சுலபமாக கிடைக்கப்பெறுதல், மலிவான விலை, மிக இள வயதில் கள் குடிக்கத் தொடங்குதல் ஆகியன தோட்டத் தொழிலாளர்கள் கள் குடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாவதை மேலும் ஊக்கப்படுத்தின (Krishnan & Raman, 2018). இதன் காரணமாக, தொழிலாளர்கள் தங்களுடைய வருவாயிலிருந்து பெரும்பகுதியை அதற்குச் செலவிட்டனர். அதன் தொடர்ச்சியாக, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு குடும்ப உறுப்பினர்களிடையே பொருளாதார வன்முறை உருவெடுத்தது.

இது குறைவான பொருளாதார ஆதரவோடும் கட்டுப்பாடு மிக்க பொருளாதார சூழ்நிலையோடும் குடும்ப பொறுப்புகளைச் சுமக்க வேண்டி இருந்த தாய்மார்களையும் மனைவிமார்களையும் வெகுவாகப் பாதித்தது. அவர்கள் குடும்ப தேவைக்கான பொருட்களை வாங்காமல் கள் வாங்குவதற்கு சம்பளத்தைச் செலவழித்த செயலின் தீவினைகளைச் சுட்டிக் காட்டி அதைக் கண்டிக்கவும் செய்தனர் (Krishnan, 2014).

தோட்டப்புறங்களில் கணவன்மார்களின் குடிப்பழக்கத்தின் காரணமாக இந்தியப் பெண்கள் எதிர்கொண்ட இந்தப் பொருளாதார வன்முறையை மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சம்பளத்தைப் பெற்றவுடன் கள் கடைக்குச் சென்று பணத்தைச்

செலவழித்துக் குடும்பத்தைத் துன்பத்தில் ஆழ்த்திய கணவனின் செயலைக் கீழ்க்காணும் பாடல் வரிகள் பதிவுச்செய்கின்றன (Thandayutham, 1998).

"…………………………..

மம்புட்டியத்தான் கையிலெடுத்தா

முப்பது காசு சம்பளம் தந்தா கடவுளே!

வீட்டுக்கு வரும்போது

குளிச்சு முழுகிகிட்டு

கள்ளுக் கடைக்குப் போகும்போது கடவுளே!

…………………………."

(தண்டாயுதம், கூலி அடிமை, 24)

"…………………………..

கள்ளுக்குடிக்கப் போயி

காசு போச்சுதடி அத்தே

…………………………."

(தண்டாயுதம், கள், 234)

மலாயாவில் ஆங்கிலேய காலனித்துவத்தின் போது ஒரு சராசரியான இந்தியக் குடும்பம் முதன்மையாக தங்களுடைய வருவாயை உணவுப்பொருட்களை வாங்குவதற்குச் செலவிட்டனர் என கிருஷ்ணன் (2014) குறிப்பிடுகிறார். இருந்தபோதிலும், தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள சிக்கல் இருந்துக் கொண்டே இருந்தது. பிரித்தானிய ஆட்சியாளர்களும் தோட்டப்புற உரிமையாளர்களும் தொழிலாளர்களின் சம்பளத்தைக் கையாடல் செய்து கொண்டே இருந்தனர். அதிகாரத்தில் இருந்தவர்கள் ரப்பரின் சந்தை விலை சரியும் போதெல்லாம் தொழிலாளர்களுடைய சம்பளத்தைக் குறைத்தனர். சமயங்களில் இச்சூழலின் காரணமாக தொழிலாளர்கள் வேலை இழக்கவும் நேரிட்டது (Sundram & Dali, 2022). இரப்பர் மரத் துறையின் வளர்ச்சிக்கு இந்தியத் தொழிலாளர்கள் அரும்பாடு பட்டிருந்தாலும் அவர்கள் குறைவான ஊக்கத்தொகையையும் தொடர் சம்பளக் குறைப்பையே எதிர்கொண்டனர் (Arokiam & Raja, 2019). இது அவர்கள் குடும்பத்தை நேர்த்தியாக நடத்த இயலாமல் செய்ததோடு பெண்களின் மீதான பொருளாதார வன்முறையை மேலும் மோசமாக்கியது (Logeswari, 2017). அதோடு, அதிகப்படியான கள்வெறியும் மோசமான பொருளாதார சிக்கலை உருவாக்கி பெண்களை மட்டுப்படுத்தியது.

இதனால், பெண்கள் போதிய சேமிப்பு இல்லாமல் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கீழ்க்கண்ட பாடல் வரிகள் அதைக் காட்டுகின்றன.

"…………………………..

அடுத்த வீட்டுக்காரன் கிட்ட

அம்பது பைசா வாங்கிகிட்டு

…………………………."

(தண்டாயுதம், குடி கெடுக்கும் குடி, 234)

இது தோட்டப்புறங்களில் இந்தியப் பெண்களின் பொருளாதார உரிமை இழந்த நிலையைக் காட்டுகிறது. இதற்கும் மேலாக, ஓய்வொழிச்சல் இல்லாத மிகுதியான வேலைப்பளுவால் பாதிக்கப்பட்ட கணவன்மார்கள் மனைவிமார்களை தங்களுடைய மன உளைச்சலைக் கொட்டும் இடமாகவும், கள் அருந்த பணம் பெறும் இடமாகவும் பயன்படுத்திக் கொண்டனர். இது குடும்பங்களில் சச்சரவை உருவாக்கி, நிம்மதியில்லாத சூழலை ஏற்படுத்தியது.

## உடல் மற்றும் பாலியல் வன்முறை

மிகுதியான கள்வெறிக்கு ஆட்பட்ட இந்திய ஆண் தொழிலாளர்கள் சுயக்கட்டுப்பாடின்றி தங்களுடைய மனைவிமார்களை பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் துன்புறுத்தினர் (Kingston, 2015; Krishnan & Raman, 2019). இன்னும் சில இடங்களில் தங்களுடைய மனைவிகளைப் பாலியல் தொழிலில் உட்படுத்தவும் துணிந்துள்ளனர். அதற்கு இணங்காத மனைவிமார்களை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர் (Katigason & Dali, 2022). கீழ்க்காணும் பாடல் கணவன்மார்களின் அக்கொடியச் செயலைக் காட்டுகிறது.

"……………………………..

கூத்திமார்களையும் கூட்டிக்கிட்டு - என்னைக்

குந்த வெச்சு வுட்டுபிட்டு

பணம் வாங்கிட்டு

அட கூறு கெட்ட மாமா

குணமிழந்த மாமா

நினைவிழந்து போகலாமா....

……………………………."

(தண்டாயுதம், கெட்டுப் போன மச்சான்,78)

"……………………………..

கள்ளுக்குள்ள தேளிருந்தா

தள்ளிப்புட்டுக் குடிக்கச் சொல்லும்

சோத்துக்குள்ள கல்லிருந்தா

பொண்டாட்டிய அடிக்கச் சொல்லும்!

(தண்டாயுதம், குடிகாரனின் வீரம், 85)

"……………………………..

விடுவேனாடி சும்மா

வைப்பேன் உன்னைக் கும்மா

……………………………."

(தண்டாயுதம், கள்ளுக்கடை பாடல் - 2, 89)

"……………………………..

பொண்டாட்டிக்கிட்ட மொறைக்கிறான்

……………………………."

(தண்டாயுதம், குடி கெடுக்கும் குடி, 234)

இந்த அடக்குமுறை மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள இந்தியப் பெண்களிடையே மிகுதியான உணர்வு மற்றும் உளவியல் மீது எதிர்மறை தாக்கங்களை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குடும்ப நிலையைப் பாதிப்பவையாகவே அமைந்தன.

## உணர்வு மற்றும் உளவியல் வன்முறை

அதிகப்படியான கள் குடியால் உச்சக்கட்ட போதைக்கு ஆட்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் நிதானமின்றி நடந்து கொண்டனர். இப்பழக்கத்தை அவர்கள் தலைமுறை தலைமுறையாக வந்தப் பழக்கம் என்று நியாயப்படுத்தவும் செய்தனர். அவர்களின் அந்த வாக்குமூலத்தைக் கீழ்க்கண்ட வரிகள் காட்டுகின்றன.

"……………………………

நான் மட்டும்தான் குடிக்கிறேன்னு

நினைக்காதடி கண்ணே - இது

நா - நாலு - தலைமுறையாய்

நடக்குதடி பெண்ணே!

(முத்தம்மாள், கள்ளுக்கடை பாடல்-2, 89)

மலாயாவில் இந்தியத் தொழிலாளர்களிடையே பெருகிய கள் பருகும் பழக்கத்தின் வரலாற்றை ஆராயும்போது, அது ஆங்கிலேய காலனித்துவத்தின் போதே பல்கி பெருகியதை உறுதியாக அறிய முடிகிறது. (Sandhu, 2010). இப்பழக்கம் இந்தியத் தொழிலாளர்கள் மலாயாவிற்கு புலம் பெயரும் போது உடன் கொண்டு வந்த பழக்கம் என்று கூறிய வேளை, அரசரத்னம் (1970) இப்பழக்கத்தைப் பெருபான்மையான இந்தியத் தொழிலாளர்கள் மலாயாவில்தான் உருவாக்கிக் கொண்டனர் என்று கூறுகிறார். தொடக்கத்தில், மேற்குறிப்பிட்டது போல வேலையினால் ஏற்படும் மன அழுத்தத்தையும் துன்பத்தையும் போக்குவதற்கு பருகப்பட்ட கள், கால ஓட்டத்தில் போதையை ஏற்படுத்தி தொழிலாளர்களிடையே நடத்தை சிக்கலை ஏற்படுத்தியது. சிலர் குடிக்கு அடிமையாகி கள் விற்கும் கடைகளுக்கு முன்பு விழுந்து கிடந்ததும் காயங்களுக்கு ஆளாகி துன்பப்பட்டதும் இறந்து போனதும் இந்த நடத்தை சிக்கலால் ஏற்பட்ட விளைவுகளே ஆகும். அதைக் கீழ்க்கண்ட பாடல் வரிகள் விவரிக்கின்றன.

"……………………………

கள்ளுக்குடித்த வெறியிலே

கண்ணும் மண்ணும் தெரியலே

……………………………"

(முத்தம்மாள், கள்ளுக்கடை பாடல் - 2, 89)

"……………………………

கள்ளுக் கடையில தாண்டா

கவுந்துக்கிட்டு கிடந்த பையண்டா

(தண்டாயுதம், தில்லாலே பாட்டு, 80)

"……………………………

மச்சான் மூச்சுமுட்ட

கள்ளக் குடிக்கையிலே

கீழே விழுந்து மண்டையப்

போட்டானாம் பொண்ணுமே தில்லாலே...

(தண்டாயுதம், கள்ளுத்தண்ணி, 307)

அதுமட்டுமல்லாது, மேலும் இந்தச் சூழலை ஆராயும்போது, நாட்பட்ட வீணாகிப் போன கள்ளை அருந்திய இந்திய ஆண் தொழிலாளர்கள் மோசமான ஆரோக்கிய சிக்கல்களுக்கு ஆளாகி இருந்ததை அறிய முடிகிறது. கள்ளினுடைய போதைத் தன்மையை அதிகரிப்பதற்காக கள் கடை உரிமையாளர்கள் அதில் சுண்ணாம்பு, கஞ்சா, கரு ஊமத்தை, மது, சம்சு, மாவு, தண்ணீர் மற்றும் போதையை அதிகப்படுத்தக் கூடிய ஏனையப் பொருட்களையும் கலந்துள்ளனர். இச்செயல் செரிமானமின்மை மற்றும் வாயிற்றுப்போக்கு ஆகியவற்றை ஆண்களிடையே ஏற்படுத்தியது. இவற்றோடு, தளர்ந்து வீழும் நிலை, இயல்பற்ற உடல் வெப்ப நிலை, தடுமன், வறண்ட தோல் மற்றும் பலவீனமான நாடித்துடிப்பு ஆகியவற்றையும் தோற்றுவித்தது. மேலும், இதனால் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு தொடர்ச்சியான வாந்தி பேதியோடு, பாதி அல்லது முழுமையாக சிறுநீர் வெளியேறாமை போன்ற சிக்கலகளும் ஏற்பட்டன. இச்சிக்கல்கள் அவர்கள் அந்தக் கலப்படக் கள்ளை அருந்திய ஒரு மணி நேரத்திற்குள் ஏற்படும். அடுத்த 36 மணி நேரத்திற்குள் முறையான சிகிச்சை வழங்காவிட்டால் மரணம் ஏற்படும். இருந்தாலும், தூய்மையான உயர்தர கள்ளை வாங்குவதற்கு வசதி இன்மையால் தோட்டப்புற இந்திய ஆண்கள் இவ்வகை கள்ளையே அதிகம் அருந்தினர்.

அவற்றோடு, மேற்குறிப்பிட்டது போல இந்தக் கள் குடியின் காரணமாக சண்டை போன்ற சிக்கல்களில் ஈடுபட்டோர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். சிலர் தாமதமாக இல்லங்களுக்குத் திரும்பினர். மேலும் சிலர் தங்களுடைய மனைவிமார்களை உணவுகளைச் சமைக்கக் கட்டாயப்படுத்தினர். கீழ்க்கண்ட பாடல்கள் அவர்களுடைய செயலைக் காட்டுகின்றன.

"…………………………….

குடிச்ச வெறியினாலே

உலைகள் வெந்திடாது

தடியடி வெட்டுக் குத்துத் தாம்பறிய

(தண்டாயுதம், குடிக்க மாட்டேன்!. 235)

"…………………………….

மூச்சு மூச்சா சாரயத்த குடிக்கிறான்

முச்சந்திலே நின்னுதனே முறைக்கிறான்

முறைச்சுப் பார்க்கும் ஜனங்கள

இழுத்துப் போட்டு மிதிக்கிறான்

போலிஸ்காரன் கொண்டு போயி

கும்மாங்கும்மாங்குன்னு குத்துறான்

……………………………."

(தண்டாயுதம், குடி கெடுக்கும் குடி, 234)

"…………………………….

என்ன கறி ஆக்கின?

போடம்மா ரெண்டு துண்டு

போதை நல்லா ஏறட்டும்

(முத்தம்மாள், கள்ளுக்கடை பாடல் -1 , 88)

இந்தச் சிக்கல்கள் குடும்பத்தில் இருந்த இந்தியப் பெண்களின் உணர்வு மற்றும் உளவியல் நலத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. கணவரின் குடிப்பழக்கம் மனைவிமார்களை அதிகப்படியான மன அழுத்தத்திற்கு ஆளாக்குகிறது என்ற ஆய்வு இதை உறுதிச்செய்கிறது (Pathath *et al.,* 2018).

அவர்கள் அடிக்கடி உணர்வு ரீதியாக பாதிக்கப்படுவதோடு (Jijila & Kuruvilla, 2024; Kashyap *et al.*, 2024) தாய் தந்தையரின் இருநிலை பொறுப்புகளையும் எடுத்துச் செயலாற்றும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் (Narayan *et al.*, 2024). மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள இந்தியப் பெண்களும் இதே நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் விரக்தியாகி மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளனர். இல்லத்தரசியாக இருப்பதோடு, கூடுதல் பொருளீட்ட கணவரோடு இணைந்து இரப்பர் மரங்கள் சீவ செல்வதும், குழந்தைகளைக் கண்காணித்துக் கொள்வதும் அவர்களின் மன அழுத்ததை மேலும் அதிகப்படுத்துபவையாகவே இருந்துள்ளன. அதோடு, கணவரின் குடிப்பழக்கம் இணைந்து துன்புறுத்தும் போது அவர்களால் அச்சூழலைக் கையாள முடியாமல் சென்றுள்ளது. எனவே, இதிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அவர்கள் சில வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர்.

முதலாவதாக, கணவர் வீட்டிற்குள் வருவதைத் தடுத்துக் கதவைத் தாழிட்டுள்ளனர். இரண்டாவதாக, குடும்பத்தை விட்டு விட்டுத் தங்களுடைய பெற்றோர்கள் வீட்டிற்கே திரும்பியுள்ளனர். கீழ்க்கண்ட பாடல்கள் அவர்களின் அந்நடவடிக்கைகளைக் காட்டுகின்றன.

"……………………………

கதவைத் திறடி அம்மா

வம்பு பண்ணாதே சும்மா

……………………………"

(முத்தம்மாள், கள்ளுக்கடை பாடல் - 1 88)

"……………………………

புள்ளையெல்லாம் புருசன்

கிட்ட புடிச்சு கொடுத்துக்கிட்டு

……………………………

அப்பன் வீடு போய் சேர்ரா!

……………………………"

(தண்டாயுதம், குடி கெடுக்கும் குடி, 234)

## முடிவுரை

இதன்மூலம், மலேசியத் தமிழ் நாட்டுப்புறப்பாடல்களிலுள்ள இந்தியப் பெண்கள் தங்களுடைய கணவன்மார்களின் குடிப்பழக்கத்தினால் பொருளாதாரம், உடல், பாலியல், உணர்வு மற்றும் உளவியல் ஆகிய வகைகளில் குடும்ப வன்முறைக்கு ஆளாகியுள்ளதை அறிய முடிகிறது. மேம்பட்ட வாழ்வைத் தேடி மலாயாவிற்குப் புலம் பெயர்ந்த பெண்களின் வாழ்க்கை, கணவர்களுடைய குடிப்பழக்கத்தினால் சீரழிந்துள்ளதையும் இதன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

## References


Ali, Z., Ismail, N., Bakar, A.A., & Ahmad, K. (2023) Domestic Violence in Malaysia: A Study on Causes and the Role of the Social Welfare Department. Russian Law Journal, 11(3), 1060-1068. https://doi.org/10.52783/rlj.v11i3.1395

Arokiam, S. & Raja, S, S. (2019). Path Dependent Development of Indian Plantation Labourers in Malaysia: Unfolding the Historical Events in Understanding their Socioeconomic Problems. Institutions and Economies, 11(4), 79-102. https://ijie.um.edu.my/article/view/19663

Gopal, N.A., & Musa, M. (2020). Indian Women in Malaya, 1900 to 1945: Migration Experiences and Socioeconomic Condition. TALENTA Conference Series: Local Wisdom, Social, and Arts, 3(4), 129-135. https://doi.org/10.32734/lwsa.v3i4.1148

Ishak, N, S., Dali, A, M., Ishak, N, S., & Roslan, M, F. (2024). The Sale of Samsu in Selangor, 1900-1941. International Journal of Academic Research in Business and Social Sciences, 14(10), 2497 – 2510.

Jijila, M.K, & Kuruvilla, M. (2024). Impact of Alcoholism of Partner on the Mental Health of Women: Findings from an Exploratory Research. International Journal of Social Science Humanity & Management Research, 3(4), 400-407. https://ijsshmr.com/v3i4/Doc/1.pdf

Kashyap, H., Kashyap, K., & Lalhmingmawii. (2024). The Price of Partnership: Quality of Life Issues Faced by Spouses of Alcohol-Dependent Individuals. The International Journal of Indian Psychology, 12(3), 1977-1986. https://ijip.in/wp-content/uploads/2024/09/18.01.195.20241203.pdf

Katigason, K. & Dali, A, M. (2022). Sejarah Wanita India di Tanah Melayu: Satu Penelitian Literatur. Malaysia dari segi Sejarah, 50, 159-171. https://ejurnal.psm.org.my/index.php/Malaysia-dari-segi-Sejarah/article/view/45

Kingston, P.T. (2015). Malçciyat Nâttuppu[apâmalka7il Matu. In A. Manonmani Devi (Eds.), Diaspora Tamil literature (pp. 106-109). Sultan Idris Education University.

Krishnan, P. & Raman, H, J. (2018). Toddy Business among the Indian Labour in Colonial Malaya, 1900-1957. International Journal of Humanities and Social Science, 8(10), 1-44. https://www.researchgate.net/publication/330188264_Toddy_Business_among_the_Indian_Labour_in_Colonial_Malaya_1900-1957

Krishnan, P. & Raman, H, J. (2019). Kehidupan Buruh India Ladang di Tanah Melayu, 1900-1941. SEJARAH: Journal of the Department of History, 28(2), 55-74.

Krishnan, P. & Raman, H, J. (2020). Kesan-kesan todi dalam kalangan buruh India ladang di Negeri-negeri Melayu Tidak Bersekutu, 1900-1957. Sumber, 97(117), 1-15.

Krishnan, P. (2014). Implikasi Pengambilan Todi dalam Kalangan Masyarakat India Ladang di Tanah Melayu, 1900-1957. SEJARAH: Journal of the Department of History, 23(1), 45-71. https://ijie.um.edu.my/index.php/SEJARAH/article/view/9282/6580

Logeswari, A. (2017). Trauma of Tamil labourers during British Colonisation in Malaysia as reflected in Malaysian Tamil folk songs (Master's thesis, Sultan Idris Educational University). Research Repository.

Narayan, U., Tripathi, T., Medhi, A., & Jain, A. (2024). Quality of life among spouses of patient with alcohol dependence syndrome: A hospital-based study. Journal of Clinical Images and Medical Case Reports, 5, 1-5. https://jcimcr.org/pdfs/JCIMCR-v5-3242.pdf

Pathath, A.B., Begum, N., & Ali, S, I. (2018). Alcoholism among Husbands and Its Psychological Impact on wives in Malappuram District. The International Journal of Indian Psychology, 6(4), 62-65. https://ijip.in/wp-content/uploads/2020/06/18.01.048.20180604.pdf

Sandhu, K, S. (2010). Indians in Malaya: Some Aspects of Their Immigration and Settlement (1786-1957). Cambridge University Press.

Sundram, J, G, S. & Dali, A, M. (2022). Jenis Pekerjaan dan Kadar Upah dalam Kalangan Orang India di Selangor Sebelum Perang Dunia Kedua: Satu Penelitian Awal. Malaysia dari segi Sejarah, 51, 78-93.

Thandayutham, I. (1998). Malaysian Folk Songs. Mano Printers.

## Conflict of interest

The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Dhilipkumar Agilan, Drinking Habits and Domestic Violence against Indian Women by Husbands: A study in Malaysian Tamil Folk Songs, Indian Journal of Tamil, 6(4), (2025) 10-17. https://doi.org/10.54392/ijot2542